# சிறைச்சாலையின் இருள்

சிறைச்சாலை சமூகத்தின் கண்ணாடி. அங்கு தெரிவது எமது பிரதி பிம்ப மாகும். சிறையில் இருப்பவர்கள் மக்களின் ஒரு பகுதியினராவர். மத ரீதி யான ஆழமான அறிவிருக்கும் மக்கள் இருக்கும் நாட்டில் சிறைச்சாலை எதற் கு? அது மிகவும் துரதிஷ்டவசமானது. அதைவிடவும் துரதிஷ்டவசமானது சிறையில் இருப்பவர்கள் அனுப விக்கும் வாழ்க்கையாகும். அண்மை யில் வெளியானது அங்குள்ள அந்த ரங்கமாக இருக்க முடியாதா?

2010ஆம் ஆண்டில் சிறையில் இருந்தவர்கள் 32,128 பேர். அதில் ஏறத்தாழ பாதிக்கு மேற்பட்டவர்கள் நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண் டப்பணத்தை செலுத்த முடியாதவர்கள். அவர்கள் 16,061 பேர் ஆவர். அந்த வருடத்தில் சிறைச்சாலையில் இருந்த வர்களில் நூற்றுக்கு 46.6 வீதமானவர் களான 13,378 பேர் போதைப்பொருள் குற்றத்துக்காக சிறைப்படுத்தப்பட்டவர் களாவர். சிறைச்சாலைகள் நிரம்பி வழி வது போதைக்கு அடிமையானவர்கள், இடைத் தரகர்களாக போதைப்பொருள் விற்றவர்களாவர். இறுதியில் இது போதைப்பொருள் வியாபாரிகளின் பொறிக்குள் அகப்படும்.

எந்தவொரு நாட்டிலும் சிறைச்சாலை கள் பிரச்சினைகள் கூடிய இடமாகும். நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப் பட்ட சிறைக்கைதிகளை பாதுகாத்து தண்டனையை நிறைவேற்றுவது சாதாரணமான விடயமல்ல. சமூகத் தில் இருந்து பிரிக்கப்படும் பொழுது சி றைக்கைதிகளுக்கு பாரிய மன அழுத் தம் ஏற்படும் அல்லது உருவாகும். கௌரவத்தையும் மனித பண்புக ளையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டிய சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக்கைதிகளுக்கு இடையில் மோதல்கள் ஏற்படும். வாழ்க்கையில் பெரும் பகுதியை அல்லது காலத்தை குற்றமிழைத் தவர்களோடு செலவழித்ததினால் சிறைச்சாலையில் பணிபுரிபவர்களின் வாழ்க்கை வெறுப்புமிகுந்தது. அங்கு வாழ்பவர்களுடன் வெளிவரும் அறி விப்பு தீமையானதாகும். கூடுதலான அனுதாபத்துக்குரியவர்கள் நாதியற்றுப் போன சிறைக்கைதிகளாவர்.

பிரித்தானிய யுகத்தில் இருந்து செயற்படும் சிறைச்சாலைக் கட்டமைப் பில் சேவை புரியும் அதிகாரிகளினதும் அங்கிருக்கும் கைதிகளின் பிரச்சினை களை அனுதாபத்துடன் பார்க்க வேண் டும். வெளிப்புற அழுத்தங்களினால் மட்டுப்படுத்தப்படும் தண்டனைக ளும் புனர்வாழ்வு அளிக்கப்படும் மதிப்பு மிகுந்த குடிமக்களை மீண்டு சமூகத்துடன் இணைப்பது தொடர்பாக அவதானத்துடன் செயற்படுவது அவ சியமானதாகும்.

நாட்டின் சட்டத்துக்கு அமைவாக குற்றவாளிகள் கைது செய்யப்படுவார் கள். வழக்கு விசாரணையின் முடி வில் தண்டனை உறுதி செய்யப்படும். சாட்சிகளை அழைத்து வழக்கு விசாரிப்பதற்கு காலம் செல்லும். சாட்சி களை விசாரித்து முடியும் வரை சந்தேக நபர் பாதுகாப்பாக சிறையில் அடைத்து வைக்கப்படுவார். சந்தேகநபர்களும் சிறைக் கைதிகளும் அடைக்கப்படுவது ஒரே இடத்திலாகும். போதைப்பொரு ளுக்கு அடிமையானவர்கள் கைதாகும் போது, தடுத்துவைக்கப்படுவது சிறைச் சாலையிலாகும். இதற்கு இடையில் உள்ளது செல்வமும் பலமும் உள்ள தீங்கு விளைவிக்கும் பணம்.

அவ்வாறெனின் இப் பிரச்சினை யானது மிகவும் சிக்கலானதொன்றா கும். சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருப்பவர் மனநோயாளியாகவே அங்கிருந்து வெளியேறுகிறார். இந்த முறையை எவ்வாறு மாற்றுவது?



மிலிந்த மொறகொட

புதிய சிறைச்சாலையை நிர்மா ணிக்க முடியும். பாதுகாப்புக்கு கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்த முடியும். சமூகத்தில் குற்றமிழைப்பவர் களை அடைத்து வைப்பதற்கு அறவிடப்படும் பணம் இதனால் அதிகரிப்பதோடு நட்ட ஈடு செலுத்துவது அனைத்து சமூகமுமே யாகும். சிறிய குற்றம்புரிந்து குறைந் தளவு தண்டனை அனுபவிப்பவர்களை வேறாக்கி அவர்களை சமூகத்துக்கு பயனுள்ள விடயங்களுக்கு பயன்ப டுத்துவது உகந்தது. கடுமையான சட்டங்களை நடமுறைப்படுத்துவது டன் நியாயம் கிடைப்பதை உறுதிப் படுத்த வேண்டும். நடத்தை இதனால் மேன்மைஅடையும். சிறைச்சாலை தவறை விளங்கிக் கொள்வதற்கும் சரியான பாதைக்கு வழிகாட்டும் இட மாகவும் அமையவேண்டும். மாறாக பழிவாங்குவதை தூண்டுவதற்கு இட மளிக்காமல் இருப்பது அதன் கடமை யாகும்.

www.milindaprashna.wordpress.com